# ஆவியில் நிறைந்து, பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கைக்கான அடிப்படை வேதபாடங்கள்

பதிப்புரிமை © 2022 சார்ல்ஸ் ஷேவர்

*Basic Bibles Studies for the Spirit-Filled and Sanctified Life* [ஆவியில் நிறைந்து, பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கைக்கான அடிப்படை வேதபாடங்கள்] என்னும் புத்தகத்தின் இந்தப் பதிப்பைத் தயாரித்தவர் சார்ல்ஸ் ஷேவர். சர்வதேச பதிப்புரிமை சட்டங்களால் காக்கப்பட்டிருக்கும் இப்புத்தகத்தை தனிப்பட்ட உபயோகத்திற்காக இலவசமாகப் பிரதி எடுத்துக் கொள்ளலாம். மற்றெந்த விதத்திலும் பயன்படுத்த வேண்டுமானால் ஆசிரியரின் அனுமதி பெறுவது அவசியம்.

இந்தப் பாடங்களில் வரும் வேதவசனங்கள் தமிழ் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (பழைய பதிப்பு) எடுக்கப்பட்டுள்ளன.

# இந்த வேதபாடத்தைப் பயன்படுத்துவது எப்படி

பின்வரும் ஒவ்வொரு வேதபாடமும் கிறிஸ்துவுடனான உங்கள் உறவை ஆழமாக்குவதைப் பற்றிய அடிப்படைக் கேள்விகளைக் கொண்டுள்ளன. கேள்விகளை வாசித்து, அவற்றிற்கான பதில்களை வேதாகத்தில் தேடித் பாருங்கள். உதாரணமாக, யோவான் 1:12 என்பது, யோவான் எழுதிய சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் உள்ள 12-ஆம் வசனத்தைக் குறிக்கும். வேதாகம புத்தகங்களின் வரிசையை உங்கள் வேதாகமத்தின் முதல் பக்கத்தில் உள்ள பட்டியலில் காணலாம். வேதாகமத்தில் பதில் தேடி, அதை உங்கள் சொந்த வார்த்தைகளைக் கொண்டு எழுதவும்.

வேதாகமம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மொழிபெயர்ப்பிலும் வார்த்தைகள் சற்று வித்தியாசமாக இருக்கும். உங்களுக்கு ஏற்றதொரு மொழிபெயர்ப்பிலிருந்து வேதவசனங்களை மனனம் செய்யுங்கள்.

வேதவசனத்தை மனனம் செய்ய உதவியாக அதை ஒரு அட்டையாகத் தயாரிக்கலாம் அல்லது எழுதி வைத்து, உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள் அல்லது கண்ணாடியில் ஒட்டி வையுங்கள். அதைப் பார்க்கும்போதெல்லாம் நினைவுபடுத்திக் கொள்வதே இப்படிச் செய்வதன் நோக்கமாகும்.

# சீஷத்துவ பங்காளருக்கான குறிப்புகள்

மாணவர்கள் இந்தப் பாடத்தொடரை நிறைவு செய்ய உதவியதற்கு நன்றி. பாடங்களை மீண்டும் பார்க்க நீங்களும் மாணவர்களும் வாரம் ஒருமுறை சந்திப்பது நல்லது. ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும், மாணவர்கள் ஒரேயொரு பாடத்தை மட்டும் நன்றாக படித்து வர உதவியாக மற்ற பாடங்களைக் கொடுக்காதிருங்கள். வாரம் ஒரு பாடம் என்ற விகிதத்தில் படிக்கும்போது மாணவர்கள் அந்தப் பாடத்தை நன்றாகப் புரிந்து கொள்வார்கள், அதிகமாக திணிப்பது போல இருக்காது.

# 1 பரிசுத்த ஆவியானவர் யார்?

இயேசுவை உங்கள் இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு, அனுதினமும் அவரைப் பின்பற்றி வருகிறாய். வேதம் வாசித்து, ஜெபிக்கக் கற்றுக்கொள்ளும் நீங்கள், பரிசுத்த ஆவியானவரைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்பலாம். பரிசுத்த ஆவியானவர் யார், அவர் உங்கள் வாழ்வில் எப்படி செயல்படுவார் என்பதை அறிய இந்தப் பாடம் உதவும்.

1. தேவனுடைய ஆவியானவர் மனிதர்களுக்குள் ஒரு விசேஷித்த கிரியையை செய்யும் நாளொன்று வரும் என்று எசேக்கியேல் முன்னுரைத்தார். ஆவியானவர் உங்களுக்காக செய்வதென்ன? (எசேக்கியேல் 36:26-27) ______________________________

   ______________________________

2. இயேசு சிலுவை மரணத்தை எதிர்கொண்டார். அதற்கு, அவர் தம் சீஷர்களை விட்டுப் பிரிந்து செல்வார் என்று அர்த்தமாகிறது (யோவான் 14:1-4). கிறிஸ்துவின் இடத்தில் வரவிருந்தவர் யார்? (யோவான் 14:16-17) ______________________________

   ______________________________

3. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதில் உள்ள வரம்புகளாக இயேசு கூறுவதென்ன? (யோவான் 14:17)________

   ______________________________

4. யோவான் 15:26-ல் பரிசுத்த ஆவியானவர் செய்வதென்ன?____

   ______________________________

   அதற்கு கிறிஸ்துவின் சீஷர்கள் என்ன செய்ய வேண்டும்? (யோவான் 15:27)

   ______________________________

   ______________________________

5. உலகத்தில் பரிசுத்த ஆவியானவர் செய்யவிருக்கும் விசேஷித்த கிரியை என்ன? (யோவான் 16:8-11)______________________________

   ______________________________

   ஆவியானவர் உங்களை கண்டித்து உணர்த்திய தருணத்தைட் பற்றிச் சொல்லவும். ______________________________

   ______________________________

6. சீஷர்கள் மத்தியில் ஆவியானவர் செய்யும் விசேஷித்த கிரியை என்ன? (யோவான் 16:13-14) ____________________

____________________________________________

____________________________________________

ஆவியானவர் உங்களை வழிநடத்திய ஒரு தருணத்தைப் பற்றிச் சொல்லவும். ____________________

____________________________________________

7. "உங்களுக்கு இன்னொரு துணையாளரைக் கொடுக்க" என்று ஜேம்ஸ் மோஃபட் யோவான் 14:16-ஐ மொழிபெயர்க்கிறார். பின்வரும் வசனங்களை வாசித்து, பரிசுத்த ஆவியானவர் எப்படி உதவி செய்கிறார் என்பதை விவரிக்கவும்.

அ. ரோமர் 8:26 ____________________

ஆ. அப்போஸ்தலர் 1:8 ____________________

இ. அப்போஸ்தலர் 4:31 ____________________

ஈ. 1 பேதுரு 1:21 ____________________

உ. ரோமர் 8:16 ____________________

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவிய ஒரு தருணத்தைப் பற்றிச் சொல்லவும். ____________________

____________________________________________

8. ரோமர் 8:9 வசனத்தின்படி, மெய்யான கிறிஸ்தவர்கள் அனைவரும் இன்று பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தேவனுடன் எப்படிப்பட்ட இன்னும் ஆழமான உறவு அவசியம்? (எபேசியர் 3:16, 19) ____________________

____________________________________________

____________________________________________

9. ஆதி அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியைப் பொழிந்தது அல்லது அருளியது யார்? (அப்போஸ்தலர் 2:32-33) ____________________

____________________________________________

10. 1 பேதுரு 1:15-16-ல் தேவனை விவரிக்கப் பயன்படுத்தப்படும் வார்த்தை எது? ____________________

____________________________________________

பரிசுத்த வாழ்க்கை என்றால் என்ன? ____________________

____________________________________________

11. உங்களைப் பரிசுத்தவானாக்க (பரிசுத்தப்படுத்த, சுத்திகரிக்க அல்லது பிரதிஷ்டை செய்ய) பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியை என்ன? (1 பேதுரு 1:2) ____________________

____________________

12. ரோமர் 8:9-ல், பரிசுத்த ஆவியானவர் தேவ ஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார். இங்கு பரிசுத்த ஆவியானவருக்குக் கொடுக்கப்படும் மற்றொரு பெயர் என்ன? ____________________

____________________

ஏன் அவர் அப்படி அழைக்கப்படுகிறார்? ____________________

____________________

13. இந்தப் பாடத்தில் படித்ததிலிருந்து, பரிசுத்த ஆவியானவர் யார் என்று சொல்வீர்கள்? ____________________

____________________

____________________

____________________

14. இன்று தேவ ஆவியானவர் எங்கு வாசம் பண்ண விரும்புகிறார்? (1 கொரிந்தியர் 3:16) ____________________

____________________

15. வேல்ஸ் வேதாகமக் கல்லூரியை நிறுவிய வேல்ஸ் நாட்டவரான ரீஸ் ஹோவெல் (1879-1950) ஒரு ஜெப வீரராக இருந்தார். அவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, ஆவியினால் பிறந்தவராக இருந்தாலும், பரிசுத்த ஆவியானவரை ஆழமான விதத்தில் சந்திப்பதைப் பற்றி சாட்சி கொடுத்தார்:

"இரட்சகருக்கு ஒரு சரீரம் இருந்தது போல, நானும் விசுவாசியின் சுத்திகரிக்கப்பட்ட ஆலயமாகிய சரீரத்தில் வாசம் பண்ணுகிறேன். ஒரு நபராகவும் தேவனாகவும் இருக்கும் நான் உன் சரீரத்தின் மூலம் நான் செயல்படும்படி அதை எனக்குக் கொடுக்குமாறு உன்னிடம் கேட்க வந்தேன். எனக்கு ஆலயமாக இருக்க ஒரு சரீரம் தேவை (1 கொரி.6:19). . .

அதாவது, வீழ்ந்து போன என்னுடைய சுபாபத்தின் ஒவ்வொரு பகுதியும் சிலுவையில் அறையப்பட வேண்டும், அப்போது அவர் தம் ஜீவனையும், சுபாவத்தையும் எனக்குக் கொடுப்பார்" என்று பரிசுத்த ஆவியானவர் என்னிடம் சொன்னார்.

(நார்மன் க்ரப், ரீஸ் ஹோவெல், *Intercessor* [பரிந்துபேசுபவர்], ஃபோர்ட் வாஷிங்டன், பதிப்பு: கிறிஸ்டியன் லிட்டரேச்சர் க்ரூசேட், 1952.)

16. இந்த சாட்சியில் உங்களுக்குக் கிடைத்த முக்கிய செய்தி என்ன? ____________________

____________________

நீங்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி சிலவற்றை நினைத்து வைத்திருப்பீர்கள். பரிசுத்த ஆவியானவர் ஒரு துணையாளராக இருக்கிறார். அவர் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவியாயிருக்கிறார். அவர் உங்களை இயேசுவைப் போல மாற்ற விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கிறார். அவரால் எல்லாம் கூடும்.

பரிசுத்த ஆவியானவரைப் பற்றி வேதாகமத்தில், குறிப்பாக அப்போஸ்தலர் நடபடிகளில், ஏராளமான காரியங்களை அறியலாம். இந்தப் பாடங்களைப் படிக்கும்போது அப்போஸ்தலர் நடபடிகளிலிருந்து தினமும் ஒரு அதிகாரம் வாசித்தால் உதவியாக இருக்கும். இந்த வேதபாடங்களில் அப்போஸ்தலர் நடபடிகளிலிருந்தும், வேதாகமத்தின் மற்ற புத்தகங்களிலிருந்தும் கேள்விகள் கேட்கப்படும்.

பரிசுத்த ஆவியானவர் யார் என்பதைப் பற்றி இப்போது இன்னும் நன்றாக அறிந்திருப்பீர்கள். இருப்பினும், அவர் உங்கள் வாழ்க்கையில் செய்ய விரும்புவதைப் பற்றி அறிய ஏராளம் உண்டு. மேலும் அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா?

## மனன வசனம்

நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவான் 14:16-17).

# 2 கிறிஸ்தவரின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர்

ஒருவர் "ஆவியினால் பிறந்தாலொழிய" (யோவான் 3:5,8) கிறிஸ்தவ வாழ்க்கை சாத்தியமில்லை. கிறிஸ்தவர் என்றாலே அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்தான். தேவன் அருளும் இந்த ஈவைப் பற்றி இன்னும் அதிகம் கற்றுக்கொள்வோம்.

1. யோவான் 3:1–15 வாசிக்கவும்.

அ. நிக்கொதேமுவின் மதரீதியான நிலை என்னவாக இருந்தது? (யோவான் 3:1–2) ____________________

____________________________________________

அ. தேவராஜ்யத்தில் (தேவனுடைய ஆளுகையின் கீழ்) இருப்பதற்கான குறைந்தபட்ச தகுதியாக இயேசு சொல்வதென்ன? யோவான் (3:3) ____________________

____________________________________________

இ. "ஆவியினால் பிறப்பது" எதற்கு ஒப்பிடப்படுகிறது? ஏன்? (யோவான் 3:8) ____________________

____________________________________________

ஈ. இப்படி ஆவியில் பிறக்கும் அனுபவத்தைப் பெற நீங்கள் செய்ய வேண்டியது என்ன? (யோவான் 3:15 மற்றும் 1:12)____

____________________________________________

உ. புதிதாகப் பிறப்பது புதுவாழ்வைக் குறிக்கிறது. நீங்கள் ஆவியில் பிறந்ததான புதிய வாழ்க்கை பின்வரும் பகுதிகளில் எப்படி மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது?______________

(1) அன்புகூருவதற்கான திறமையில்? ____________________

____________________________________________

(2) தேவனுக்குக் கீழ்ப்படிவதில்? ____________________

____________________________________________

(3) பிறருடனான உங்கள் உறவுகளில்? ____________________

____________________________________________

(4) பாவத்தைக் குறித்த உங்கள் மனப்பான்மையில்?_______

____________________________________________

2. ஆவியில் பிறத்தல் அல்லது புதிதாகப் பிறத்தலைப் பற்றி யோவான் சுவிசேஷம் குறிப்பிடுகிறது. தேவன் உங்களை

மாற்றியிருக்கும் விதங்களை இங்கு பகிர்ந்து கொண்டீர்கள். கிறிஸ்துவுக்குள் நீங்கள் பெற்றிருக்கும் புதிய வாழ்வை வெளிப்படுத்தவதற்கான மற்ற வழிகளைப் பற்றி புதிய ஏற்பாட்டின் பிற்பகுதியில் யோவான் பேசுகிறார்.

அ. 1 யோவான் 4:7-8 ____________________

____________________

ஆ. 1 யோவான் 2:3 ____________________

____________________

இ. 1 யோவான் 5:4-5 4:4 ____________________

____________________

____________________

ஈ. 1 யோவான் 4:13 ____________________

____________________

உ. 1 யோவான் 5:18 ____________________

____________________

3. இவற்றில் எந்த வழிகளில் உங்களுக்கு அதிக உதவி தேவை?

____________________

இவற்றில் எந்த வழிகளில் நீங்கள் சிறப்பாக செயல்படுவதாக நினைக்கிறீர்கள்? ____________________

____________________

4. நீங்கள் பாவம் செய்தால் என்ன செய்ய வேண்டும்? (1 யோவான் 2:1-2) ____________________

____________________

____________________

5. நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதை எப்படி அறிவீர்கள்? (ரோமர் 8:16) ____________________

____________________

____________________

அதை உங்கள் வாழ்வில் எப்படி அனுபவித்திருக்கிறீர்கள்?____

____________________

6. எபேசியர் 4:29-32-ல் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கைகள் யாவை?

____________________

பரிசுத்த ஆவியானவரை இன்னும் நன்றாக அறிந்து கொள்ள இந்த சத்தியம் எவ்வாறு உதவுகிறது? ______

7. எபேசியர் 2:5, 8-10-ல் பவுல் எவ்விதத்தில் ஆவியில் பிறப்பதைப் பற்றி உணர்த்துகிறார்? ______

8. எபேசிய கிறிஸ்தவர்களுக்காக பவுல் எப்படி ஜெபித்தார்?
அ. எபேசியர் 3:16-ல் ______
ஆ. எபேசியர் 3:19-ல் ______

9. உங்கள் வாழ்க்கையில் இந்த ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் என்று விசுவாசிக்க உங்களை உற்சாகப்படுத்துவது எது? (எபேசியர் 3:20-21) ______

10. கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளின்போது பேதுரு அவரை மறுதலித்தார். ஆனால், கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பின் பேதுருவிடம் பேசுகிறார் (யோவான் 21:15-22). அதன்பின் ஆதித் திருச்சபையில் ஒரு தலைவராக மாறும் அளவிற்கு பேதுருவை மாற்றும் அளவிற்கு நடந்து என்ன? (அப்போஸ்தலர் 1:8; 2:2-4; 4:8) ______

அவருடைய பிரசங்கத்தில் வல்லமைக்கு சாட்சியாக இருந்தது எது? (அப்போஸ்தலர் 2:41) ______

ஆவிக்குரிய வல்லமைக்காக நீங்கள் எப்படி ஏங்கி இருக்கிறீர்கள்? ______

11. பேதுரு பரிசுத்த ஆவியானவரைப் பற்றி கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? (அப்போஸ்தலர் 2:38-39)____________

________________________________________________

________________________________________________

________________________________________________

முதலில் நடக்க வேண்டியது என்ன? (அப்போஸ்தலர் 2:38)___

________________________________________________

12. முதலாம் "உள்ளூர் சபைக் குழு" என்று அழைக்கக் கூடிய ஒன்று அப்போஸ்தலர் 6:3-ல் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் கொண்டிருந்த பண்புகள் யாவை? _______

________________________________________________

________________________________________________

13. கிறிஸ்து உங்களுக்குள் வாழ்கிறார் என்பதை எப்படி அறிவீர்கள்? (1 யோவான் 3:24) ________________________________

________________________________________________

14. முன்னாள் அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்ஸனின் உதவியாளரான சார்ல்ஸ் கோல்சன் வாட்டர் கேட் ஊழலில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டபோது, அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறைவாசத்தின்போது, அவர் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராகி, சிறை சீர்திருத்தத்தின் தலைவருமானார். கோல்சனை கிறிஸ்துவிடம் நடத்தியவர் ரேத்தியான் கார்ப்போரஷனின் தலைவரான டாம் ஃபிலிப்ஸ் ஆவார். ஃபிலிப்ஸ் கோல்சனிடம் சொன்ன சாட்சி இதுவே:

பயனுள்ள ஒன்றும் என்னிடம் இருந்ததாகத் தெரியவில்லை. எல்லாமே மேலோட்டமாக இருந்தது. வாழ்க்கையில் காணக்கூடிய எல்லாவற்றிற்கும் கீழே என்ன இருக்கிறது என்பதை அறியாவிட்டால், அவையனைத்தும் மாயையே.

...வேலை நிமித்தம் ஒருநாள் இரவில் நான் நியூயார்க் பட்டணத்தில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, அங்கிருந்த மேடிசன் ஸ்கொயர் கார்டனில் பில்லி கிரஹாம் கூட்டம் நடத்துவதை அறிந்தேன்... என்னதான் நசக்கிறது என்று பார்க்கவும், ஏதாவது விடைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் அங்கு சென்றேன். அன்றிரவு கிரஹாம் சொன்ன காரியம் எல்லாவற்றையும் எனக்கு சரிசெய்து விட்டது. எதை நான் தவற விட்டிருந்தேன் என்பதை அறிந்தேன். அது இயேசுவுடன் உள்ள தனிப்பட்ட உறவுதான். என் வாழ்க்கையில் வரும்படி அவரை அழைத்து, அவரிடம் என் வாழ்வை ஒப்புக்கொடுக்கவில்லை என்னும் உண்மைநிலையைக்

கண்டுகொண்டேன். ஆகவே, அந்தத் தொடர் கூட்டங்களின் மத்தியில் அன்றிரவு நான் அதைச் செய்தேன்.

கிறிஸ்துவை என் வாழ்வில் வரவேற்றபோது, அவருடைய பிரசன்னம் என்னோடு இருப்பதை உணர முடிந்தது. அவருடைய சமாதானம் எனக்குள் வந்தது. அவருடைய ஆவி எனக்குள் இருப்பதை உணர்ந்தேன். பின்னர் நியூயார்க் நகரின் வீதிகளில் தனிமையில் உலாவச் சென்றேன். அதற்கு முன்னால் எனக்கு நியூயார்க் நகரமே பிடிக்காது, ஆனால் அன்றிரவு அந்நகரம் அழகாகத் தோன்றியது. பல கட்டிடங்களைத் தாண்டி நடந்து கொண்டிருந்தேன். எல்லாமே வித்தியாசமாகத் தோன்றியது. மென்மையான மழையும், நகர விளக்குகளின் பொன்னிற வெளிச்சமும் நகரத்தின் அழகை மிளிரச் செய்தன. என்னுள் ஏதோ நடந்திருந்தது என்பதை அறிந்தேன்.

(சார்ல்ஸ் கோல்சன், *Born Again* [மறுபடியும் பிறந்தேன்], டாப்பன், நியூஜெர்சி: ஃபிளெமிங் ஹெச். ரெவெல், 1976.)

15. இந்த சாட்சி உங்களுக்குச் சொல்வதென்ன? ____________________

____________________________________________________________

____________________________________________________________

பரிசுத்த ஆவியான தேவன் உங்களுக்குள் கிரியை செய்து, கிறிஸ்துவை அறியச் செய்கிறார். ஆவியானவர் அருளும் புதிய வாழ்வும், பிரசன்னமும், உறுதியும், தலைமைத்துவமும் உங்களுடையதாகின்றன. ஆவியானவர் இத்தனை காரியங்களைச் செய்யத் தொடங்கினாலும், சிலசமயங்களில் ஆவிக்குரிய பிரச்சனைகள் எழத்தான் செய்கின்றன. அடுத்த பாடத்தைப் படிக்கும்போது நடப்பதை உங்களால் நன்றாக விளங்கிக் கொள்ள முடியும்.

## மனன வசனம்

அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம் (1 யோவான் 3:24).

# 3 பிரச்சனைகளும் தீர்வுகளும்

கிறிஸ்துவுக்குள் உங்களுக்குக் கிடைத்திருக்கும் புதுவாழ்வு சிலகாலம் நன்றாக போய்க் கொண்டிருக்கும். ஆனால் நாளடைவில் எல்லா கிறிஸ்தவர்களுமே செல்லும் பாதையில் தடுக்கி விழச் செய்யும் மேடுபள்ளங்களை சந்திப்பார்கள். அந்த மேடுபள்ளங்களை நீங்கள் எப்படிக் கையாளுகிறீர்கள் என்பதுதான் கிறிஸ்துவுடன் நடக்கும் உங்கள் வாழ்க்கையின் பண்பைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும்.

1. பெந்தெகொஸ்தே நாளுக்கு (பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டு, நிரப்பப்பட்ட நாள்) முன் கிறிஸ்துவின் சீஷர்களுடைய ஆவிக்குரிய நிலை எப்படி இருந்தது?

   அ. லூக்கா 10:20 ______________________________

   ______________________________

   ஆ. யோவான் 17:14 ______________________________

   ______________________________

2. சீஷர்களின் மனநிலைகளில் நீங்கள் காணும் பிரச்சனைகள் யாவை? ______________________________

   அ. லூக்கா 9:53–54 ______________________________

   ______________________________

   ஆ. லூக்கா 22:24 ______________________________

   ______________________________

3. இயேசு தம் சீஷரிடம் எவ்விதமான மனப்பான்மையை எதிர்பார்த்தார்? (லூக்கா 22:26)______________________________

   ______________________________

4. கிறிஸ்து தம் இவ்வுலக ஊழியத்தின் நிறைவுக்கு வந்த சமயத்தில் தம் சீஷருக்காக (நமக்காகவும்) ஜெபித்தது என்ன? (யோவான் 17:17–20) ______________________________

   ______________________________

5. கலாத்தியர் 5:13–26 வாசிக்கவும்.

   அ. கலாத்திய கிறிஸ்தவர்கள் எத்தகைய ஆவிக்குரிய பிரச்சனை அல்லது போராட்டத்தை சந்தித்தார்கள் ? (கலாத்தியர் 5:17) ______________________________

   ______________________________

   ______________________________

ஆ. கிறிஸ்தவர் ஒருவர் எப்படி தேவனுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றுகிறார்?

(1) நியாயப்பிரமாணத்தின் சாராம்சம் என்ன? (கலாத்தியர் 5:14)

______________________________

(2) ஆவியானார் உருவாக்கும் முதல் கனி அல்லது அறுவடை எது? (கலாத்தியர் 5:22)______________________

______________________________

(3) அப்படியானால், உங்களுக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? (கலாத்தியர் 5:18)________________

______________________________

இ. கலாத்தியர் 5:24-ன்படி, ஆவிக்கு (கலாத்தியர் 5:17) விரோதமான பாவ சுபாவத்தை ("மாம்சம்" என்றும் மொழிபெயர்க்கப்படுகிறது) என்ன செய்ய வேண்டும்?____

______________________________

ஈ. உங்கள் வாழ்க்கையில் "பாவ சுபாவம் அல்லது "மாம்சம்" "சிலுவையிலறையப்பட்டால்" என்னவாகும்?____________

______________________________

6. பவுலின் தனிப்பட்ட சாட்சி என்ன? (கலாத்தியர் 2:19-20)_____

______________________________

அவருடைய வாழ்வு யாருடைய ஆளுகையின் கீழ் இருந்தது?

______________________________

7. தொடர் வெற்றியின் இரகசியம் என்ன? (கலாத்தியர் 5:25)____

______________________________

அது உங்கள் வாழ்க்கையில் எப்படி சாத்தியமாகும்?_________

______________________________

8. தெசலோனிக்கேயரின் ஆவிக்குரிய நிலை எப்படிப்பட்டது? (1 தெசலோனிக்கேயர் 1:4-10)________________________

______________________________

______________________________

அவர்களுக்கு இருந்த பிரச்சனை என்ன? (1 தெசலோனிக்கேயர் 3:10 மற்றும் 4:3) ______________________________

______________________________

ஆகவே, அவர்களுக்காக பவுல் எப்படி ஜெபிக்கிறார்? (1 தெசலோனிக்கேயர் 5:23-24)______________________

______________________________________________

______________________________________________

9. தேவன் கிறிஸ்தவர்களிடம் கேட்பது என்ன? (எபிரெயர் 12:14)_

______________________________________________

10. செய்யப்பட்ட பாவங்களுக்குப் பின்னணியில் இருப்பது என்ன? (எபேசியர் 2:2-3) ______________________________

______________________________________________

இந்தப் பிரச்சனையைப் புரிந்துகொள்வதற்கு எப்படிப்பட்ட உதவியை யாக்கோபு 4:8-ல் பெற்றுக்கொள்கிறீர்கள்?_________

______________________________________________

11. ரோமர் 6 முதல் 8 வரையிலான அதிகாரங்களை வாசிக்கவும்.
அ. கிறிஸ்து உங்களுக்கு அருளியிருப்பது என்ன? (ரோமர் 6:6)

______________________________________________

______________________________________________

ஆ. ரோமர் 7:22-23-ல் பவுல் குறிப்பிடும் நான்கு "பிரமாணங்கள்" யாவை?

(1) ____________________________________

(2) ____________________________________

(3) ____________________________________

(4) ____________________________________

இ. தன் பிரச்சனைக்கும் போராட்டத்திற்கும் பவுல் கொடுக்கும் தீர்வு என்ன? (ரோமர் 8:2)

______________________________________________

______________________________________________

12. "பாவம், மரணம் என்னும் பிரமாணங்களிலிருந்து" (ரோமர் 8:2) ஆவியானவர் உங்களை விடுவிப்பார் என்றாலும், உங்கள் பலவீனங்களில் அவர் செய்வது என்ன? (ரோமர் 8:26)

______________________________________________

______________________________________________

13. எபேசியர் 6:12-13-ல் உள்ள போராட்டம் என்ன? அது கலாத்தியர் 5:17-ல் உள்ளபடி சுயநலமான சுபாவத்துடன் ஆவிக்கு இருக்கும் போராட்டத்திலிருந்து எப்படி மாறுபடுகிறது? ______________

______________________________________________

______________________________________________

14. லூக்கா 9:53-54 மற்றும் லூக்கா 22:24-ல் சீஷர்கள் கொண்டிருந்த மனப்பான்மை நினைவிருக்கிறதா (கேள்வி 2)? இதே அப்போஸ்தலர்களில் சிலரின் ஆவிக்குரிய நிலைமை அப்போஸ்தலர் 4:31-ல் எப்படி இருந்தது? இப்போது அவர்கள் வெளிப்படுத்தும் மனப்பான்மைகளும், குணாதிசயங்களும் யாவை? (அப்போஸ்தலர் 4:32-35) ________________________

______________________________________________________

______________________________________________________

15. ஷெர்வுட் வர்ட் என்பவர் பில்லி கிரஹாம் நிறுவனத்தின் *Decision Magazine* [தீர்மானம்] பத்திரிக்கையின் திருத்த ஆசிரியராகப் பணியாற்றினார். வர்ட் ஒரு கிறிஸ்தவத் தலைவராக இருந்தபோதிலும், தம் உள்ளான போராட்டங்களையும், அதற்கான தெய்வீகத் தீர்வுகளையும் அறிக்கையிடுகிறார்.

தினமும் என் வாழ்க்கையில், கடந்தகால கல்லறையிலிருந்து ஒரு பழைய நினைவு மேலெழுந்து, என் வாழ்க்கை பாதையில் நடந்த விரும்பத்தகாத ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தும்.

நான் விரக்தியடைந்து நல்ல வாழ்க்கையைப் பற்றி எப்போதும் சொல்லப்படும் காரியங்களை நான் கேள்விப்பட்டு பிறரிடம் பகிர்ந்து கொண்டவற்றை மீண்டும் யோசித்துப் பார்த்தேன்.

"நன்றாக மன்னிப்பவனாக இரு." ஆனால், மறக்க முடியவில்லை என்பதுதான் என் பிரச்சனை.

"காரியங்களை சரிசெய்து விடு." நான் சரிசெய்ய முயற்சி செய்தேன், ஆனால் அம்முயற்சி வீணானது.

"கோடரியைப் புதைத்துவிடு." செய்து பார்த்தேன்; ஆனால் அதை எங்கு புதைத்தேன் என்பது தெரிந்ததால், அதைத் தோண்டிப் பார்க்க வேண்டுமென்றே யோசனை வரும்.

"மறதி என்னும் கடலில் போட்டுவிடு." உலக வரைபடம் முழுவதும் அப்படி ஒரு கடல் இல்லவே இல்லை.

என் சொந்தம் தனிப்பட்ட, உள்ளான வாழ்க்கையில் சுவிசேஷத்தைப் பொருத்திப் பார்க்கத் தொடங்கி பல ஆண்டுகள் ஓடிவிட்டன. எனவே இம்முறையும் உதவிக்கு வேதத்தை நாடினேன். பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில், "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், ... உங்களைவிட்டு நீங்கக்கடவது." [4:31 வசனம் பார்க்கவும்] என்ற வசனத்தைப் பார்த்தேன்.

அதை வேறு யாரோதான் செய்ய வேண்டும்; அது என் திராணிக்கு மேற்பட்டது.

ஏசாயா 61-ல் இவ்வாறு வாசித்தேன்: "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் ...

அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்."

ஆக, ஆனந்த தைலம் என்னும் திரவத்தை பரிசுத்த ஆவியானவர்தான் கொடுக்கிறாரா? அப்படி என்றால், என்னில் குறைவுபட்டிருந்தது சந்தோஷம்தான்...

நான் ஒரு பாலைவனத்தின் நடுவில் பெரிய கால்வாயின் அருகே நின்றிருந்ததாகத் தெரிந்தது. அதனுள்ளே தூரத்தில் தண்ணீர் ஓடும் சத்தம் கேட்டது; ஆனால் அது என் தாகத்தைத் தணிக்க ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் அதனருகே செல்லவும் வழியில்லை.

ஆகவே, நான் கர்த்தருக்குக் காத்திருந்தேன், அவர் எனக்கு செவிகொடுத்தார். இம்முறை அவர் பிறர் மீதான என் குறைகளைக் கேட்கவில்லை, என் மீதான குறைகளையே கேட்டார்.

வார்த்தைகளைப் பேசிவிடுவது எளிது, தேவன் அதையும் அறிவார். ஆனால், நான் என் வாழ்க்கையின் சிங்காசனத்தை (அது, என் கிறிஸ்தவ வாழ்க்கை) விட்டுக்கொடுக்கிறேன் என்றும், என் கவுரவம் எல்லாம் பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுவிட்டது என்றும் சொல்லி, என்னை சிலுவையில் அறையும்படி அவரிடம் ஒப்புக்கொடுத்தபோது, அவர் என் வார்த்தைகளை ஒப்புக்கொண்டு, என் வேண்டுதலை நிறைவேற்றினார்.

அவர் தமக்கே உரிய நேரத்திலும், தம்முடைய பிரியத்தின்படியும், கலங்கிய என் இருதயத்திற்குள் ஒரு தெய்வீக கரைப்பானை அனுப்பினார். அது பல அடுக்கு பனிமூட்டத்தை சூரிய ஒளி சுட்டெரிப்பது போல இதமாக இருந்தது.

அந்த அன்பு எப்படி என்னுள் வந்ததென்று தெரியவில்லை, ஆனால் பிறருக்கு, எனக்கு மிக நெருக்கமானவர்களுக்கு, விரோதமாக வைத்திருந்த எல்லா மனக்கசப்புகளும் என்னை விட்டு மறைந்ததை அறிவேன்.

கோபம் – பகை – வேதனை உணர்ச்சிகள் – எல்லாம் மறைந்தன.

அவை அனைத்தும் கரைந்து போயின. ஆவியாய் மறைந்து விட்டன.

(ஷெர்வுட் ஈ. வர்ட், *Afterglow* [பின்னான மகிமை], கிரான்ட் ராப்பிட்ஸ்: ஸான்டர்வேன் பப்ளிஷிங் ஹவுஸ், 1976.)

16. இந்த சாட்சியைக் குறித்த உங்கள் கருத்து என்ன?__________

______________________________________________________

______________________________________________________

நாம் ஆவியில் பிறக்கும்போது, பாவ சுபாவத்தை ஒழிக்க முற்பட வேண்டும். பாவ சுபாவத்தை சிலுவையில் அறைய முடியும் என்று வேதம் கூறுகிறது! "நமக்குள் பாவத்தின் பிரமாணம் கிரியை செய்வதை" கண்டுகொள்ள முடியும் (ரோமர் 7:23). அதேசமயம், "ஆவியின் பிரமாணம்" (8:2) நம்மை விடுதலையாக்கும்!

## மனன வசனம்

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். (கலாத்தியர் 5:24-25)

# 4 ஆவியில் நிறைந்திருத்தல் – முற்றிலும் பரிசுத்தமாகுதல்

உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்து, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட கேட்டுக் கொண்டபின், தேவனோடுள்ள உங்கள் உறவின் ஆழம் அதிகரிக்கும். ஆவியானவரின் முழு ஆளுகையின் கீழ், ("உள்ளான உள்நாட்டு யுத்தம்" எனப்படும்) உங்கள் ஆத்துமாவில் எழும் உள்ளான யுத்தத்தை கையாளும்வதையே வேதம் முற்றிலும் பரிசுத்தமாகுதல் என்கிறது.

1. இனிவரும் காலத்தில் தேவன் எந்தப் புதிய வழியில் மனிதர்களைக் கையாளுவார் என்று பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியாகிய எரேமியா குறிப்பிட்டார்? (எரேமியா 31:33)__

________________________________________

2. பிலிப்பு சமாரியருக்குப் பிரசங்கித்தது என்ன? (அப்போஸ்தலர் 8:4–8, குறிப்பாக வசனம் 5)________________________

________________________________________

________________________________________

அதைக் குறித்து எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் செய்தது என்ன? (அப்போஸ்தலர் 8:14–17)______________________

________________________________________

________________________________________

3. எபேசிய கிறிஸ்தவர்களுக்காக பவுல் ஜெபித்தது என்ன? (எபேசியர் 3:16, 19)

________________________________________

________________________________________

________________________________________

4. தம்முடைய சுவிஷேசத்தை உலகம் முழுவதும் பிரசங்கிக்கும்படி கிறிஸ்து தம் சீஷருக்கு அறிவுறுத்தினார். அந்த வேலையைச் செய்ய எப்படி ஆயத்தமாக இருக்க வேண்டுமென்றார்? (லூக்கா 24:48–49) ______________________________

________________________________________

________________________________________

________________________________________

பிதா வாக்குப்பண்ணினதை அவர் இன்னும் எப்படி விவரித்தார்? (அப்போஸ்தலர் 1:4-5)

______________________________________________

______________________________________________

______________________________________________

ஆவியானவர் அவர்களுக்குச் செய்யவிருந்தது என்ன? (அப்போஸ்தலர் 1:8) ______________________________

______________________________________________

______________________________________________

5. கொரிந்திய கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் கண்ட மாற்றம் என்ன? (1 கொரிந்தியர் 6:9-11, 11) ______________

______________________________________________

11-ம் வசனத்தில் "பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்" என்னும் பதம் கொரிந்தியர்களைக் குறிப்பதாக உள்ளது. இந்த இடத்தில் இப்பதம், "ஆரம்ப பரிசுத்தமாகுதலை" குறிக்கிறது. கொரிந்தியர்கள் தேவனோடு கொண்டிருந்த உறவின் ஆழம் இன்னும் அதிகரித்து, முழுமையடைய வேண்டும் என்பதை இது எவ்வாறு உணர்த்துகிறது? (1 கொரிந்தியர் 3:1-3) ________

______________________________________________

______________________________________________

6. நீங்கள் தேவனுடன் கொண்டிருக்கும் உறவின் ஆழத்தை அதிகரிக்க அவர் உங்களை எப்படி அழைக்கிறார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

7. புதிய ஏற்பாட்டில் அநேகர் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணம்: அப்போஸ்தலர் 4:8-ல் பேதுரு, அப்போஸ்தலர் 9:17 மற்றும் 13:9-ல் (பின்னர் பவுல் என்று பெயர் மாறிய) சவுல், அப்போஸ்தலர் 11:24-ல் பர்னபா. ஆவியினால் நிறைந்த ஒருவரை நீங்கள் எப்படி விவரிப்பீர்கள்?

______________________________________________

______________________________________________

8. "ஆவியினால் நிறைந்திருப்பதையும்", "முற்றிலுமாக பரிசுத்தமாக்கப்படுவதையும்" தவிர, வேறெந்த வாக்கியங்கள்

முற்றிலும் ஒப்புவிக்கப்பட்டதும், சுத்திகரிக்கப்பட்டதுமான வாழ்க்கையை விவரிக்கின்றன?

அ. மத்தேயு 5:8 ________________

ஆ. 1 யோவான் 4:17-18 ________________

இ. எபிரெயர் 4:9-11 ________________

ஈ. எபிரெயர் 6:1 ________________

உ. ரோமர் 6:18 ________________

ஊ. இவற்றில் எந்த வாக்கியம் மிக வல்லமையாக உங்களுடன் பேசுகிறது? ஏன்?

________________

________________

________________

9. ஆவியினால் நிறைந்திருப்பதன் பலன்கள் யாவை?

அ. அப்போஸ்தலர் 4:31-32 ________________

________________

ஆ. அப்போஸ்தலர் 6:5,8 மற்றும் 7:55, 59-60 ________________

________________

இ. ரோமர் 15:13 ________________

________________

10. 1 தெசலோனிக்கேயர் 1:3-8-ல், விசுவாசிகள் பாராட்டப்படுகிறார்கள்.

அ அவர்களுக்கான தேவனுடைய சித்தம் என்ன? (1 தெசலோனிக்கேயர் 4:3,7) ________________

________________

ஆ. இந்த அறிவுறுத்தலை நிராகரித்தால் ஆவதென்ன? (1 தெசலோனிக்கேயர் 4:8)

________________

________________

இ. ஆகவே, பவுல் அவர்களுக்காக ஜெபிப்பது என்ன? (1 தெசலோனிக்கேயர் 5:32-24) ________________

________________

________________

ஈ. நம்மைப் பரிசுத்தமாக்குபவர் யார்? அது எவ்வளவு

முழுமையாக இருக்கும்? (1 தெசலோனிக்கேயர் 5:23)_____

உ. பரிசுத்தமாகுதல் தவிர வேறெதற்காக பவுல் ஜெபிக்கிறார்? (1 தெசலோனிக்கேயர் 5:23)

_______________________________________________

ஊ. உங்கள் வாழ்க்கை முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுவதற்கான ஜெபத்திற்கு தேவன் பதிலளிப்பார் என்பதைக் குறித்து எப்படி உறுதியாக இருக்கிறீர்கள்? (1 தெசலோனிக்கேயர் 5:24)___

_______________________________________________

11. எபேசியர் 5:15-21 வசனங்களை வாசிக்கவும்.

அ. இங்கு கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படும் கட்டளைகள் யாவை? ______________________________________

_______________________________________________

ஆ. எபேசியர் 5:18-ல், "நிறைந்திருங்கள்" என்று நிகழ்காலத்தில் சொல்லப்பட்டிருப்பதால், தொடர்ந்து நிறைந்திருக்க வேண்டும் என்பது அதன் அர்த்தமாகிறது. உங்கள் வாழ்க்கையில் அதன் அர்த்தம் என்ன?_______________

_______________________________________________

_______________________________________________

இ. நீங்கள் தொடர்ந்து ஆவியினால் நிறைந்திருக்க நாடும்போது, உங்கள் மூலமாக ஆவியானவர் எப்படி மற்றவர்களுக்கும் கடந்து செல்கிறார்?

(1) எபேசியர் 5:19 _____________________________

_______________________________________________

(2) எபேசியர் 5:20 _____________________________

_______________________________________________

(3) எபேசியர் 5:21 _____________________________

_______________________________________________

12. இயேசு லூக்கா 11:13-ல், பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதைப் பற்றிப் பேசும்போது வைத்த எளிய நிபந்தனை என்ன?_______

_______________________________________________

_______________________________________________

13. 40-களில் இருந்த ஆஸ்வால்ட் சேம்பர்ஸ் 1917-ல் மரித்தார். அத்துடன் அவருடைய தனிப்பட்ட ஊழியம் நிறைவடைந்தது. ஆனால், *My Utmost for his Highest* [உன்னதமானவருக்கு என் முழுமையும்] என்னும் அவருடைய புத்தகம் இன்றும் சிறப்பாக

விற்பனையாகி வருகிறது. சேம்பர்ஸ் சிறுவனாக இருந்தபோதே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். பல வருடங்களுக்குப் பின்னர், ட்யூனூன் கல்லூரியில் அவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது, எஃப்.பி. மேயர் பரிசுத்த ஆவியைப் பற்றிப் பேசக் கேட்டார். அதைக் குறித்து சேம்பர்ஸ் சொன்ன சாட்சி பின்வருமாறு:

எனக்கு பரலோகம் அல்லது தேவதூதர்களைப் பற்றிய எவ்வித தரிசனமோ, வேறு எதுவுமோ இல்லாதிருந்தது. எப்போதும் போல வெறுமையாகவும், வறட்சியாகவும் இருந்தேன். வல்லமையும் இல்லை, தேவனை அறிகிற அறிவும் இல்லை, பரிசுத்த ஆவியானவரின் சாட்சியும் இல்லை. அதன்பின், ஒரு கூட்டத்தில் பேச எனக்கு அழைப்பு வந்தது. நாற்பது ஆத்துமாக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வந்தார்கள். நான் தேவனைத் துதித்தேன் என்று நினைக்கிறீர்களா? இல்லை, பயந்து போய், மற்ற ஊழியர்களின் பொறுப்பில் அவர்களை விட்டுவிட்டு, என் நண்பராகிய திரு, மெக்கரெகரிடம் சென்று, நடந்ததைச் சொன்னேன். அவர்: "பரிசுத்த ஆவியானவரை ஒரு ஈவாகக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று இயேசு சொன்ன வார்த்தைகள் உங்களுக்கு நினைவில்லையா? அவர்: 'நீங்கள் பெலனடைவீர்கள்...' என்று சொல்லவில்லையா? இதுவே உன்னதத்திலிருந்து வரும் பெலன்" என்றார். அப்போது எனக்குள் மின்னலைப் போல ஏதோ ஒன்று நடந்தது, அப்போதே என் கையில் வல்லமை வேண்டும் என்பது போலத் தோன்றியது – என்னை முற்றிலும் பலிபீடத்தில் படைத்ததால் எனக்கு என்ன கிடைத்திருக்கிறது பாருங்கள் என்று சொல்லும் அளவிற்கு அந்த அனுபவம் இருந்தது.

அதற்கு முந்தின நான்கு ஆண்டுகள் பூமியில் நரகத்தைக் கண்டேன் என்று சொன்னால், அடுத்த ஐந்து ஆண்டுகள் பூமியில் பரலோகத்தை அனுபவித்தேன் என்று சொல்லலாம். மனித இருதயத்தின் வலி மிகுந்த ஆழம் கூட தேவ அன்பினால் நிரம்பி வழிந்தது, தேவனுக்கே மகிமை. அன்பே அனைத்திற்கும் துவக்கமும், மையமும், முடிவுமாக இருக்கிறது. அவர் உங்களுக்குள் வந்ததும், நீங்கள் காண்பதெல்லாம், "இயேசுவாக மட்டுமே இருக்கும், எப்போதும் இயேசுவாக இருக்கும்."

தேவன் உங்களுக்குச் செய்ததை நீங்கள் அறியும்போது, பாவத்தின் கொடூர ஆளுகை மறைந்துவிடும், உங்களுக்குள் வாசம் பண்ணும் கிறிஸ்துவின் சொல்லமுடியாத பிரகாசமான விடுதலை வந்துவிடும். தேவனுடைய பிரபுக்களாக இருக்க வேண்டிய மனிதர் மற்ற காரியங்களால் கட்டப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, ஓ, மக்கள் இரட்சிக்கப்படுவதற்காக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே என்று அப்போஸ்தலர் சொன்னதன் அர்த்தம் புரியத் தொடங்கும்.

மாற்றப்பட்ட ஒரு மனநிலையைக் குறித்து நான் இவ்வளவு பேசுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை: தேவன் என் மனநிலையை மாற்றினார்; அவர் அதைச் செய்யும்போது நான் என்னை விட்டுக் கொடுத்தேன்.

(ரேமன்ட் எட்மன், *They Found the Secret* [இரகசியத்தைக் கண்டுகொண்டார்கள்], கிரான்ட் ராப்பிட்ஸ்: ஸான்டர்வான் பப்ளிஷிங் ஹவுஸ், 1980.)

14. இந்த சாட்சியைக் குறித்த உங்கள் கருத்து என்ன?___________

_______________________________________________

_______________________________________________

என்னவொரு ஆனந்தம்! நீங்களும் தேவ ஆவியினால் நிறைந்திருக்கலாம். நீங்கள் முற்றிலும் பரிசுத்தமாக்கப்படலாம். ஆவியில் நிறைந்திருப்பது எப்படி என்பதைப் பற்றியதுதான் அடுத்த பாடம்.

## மனன வசனம்

துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து (எபேசியர் 5:18).

# 5 ஆவியினால் நிறைந்தவராக – முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டவராக இருப்பது எப்படி

வேதவசனம் சொல்வதை அறிந்து கொண்ட உங்களுக்கு ஆவியினால் நிறைந்திருக்கவும், முற்றிலும் பரிசுத்தமாக்கப்படவும் ஆவல் உண்டாயிருக்கும். அது நடக்கும் விதத்தை வேதம் விளக்குகிறது.

1. பரிசுத்தமாக்கப்பட அல்லது பரிசுத்தராகச் செய்யும் செயல் எது?

   அ. எபிரெயர் 10:10-14 ____________________

   ____________________

   ஆ. எபிரெயர் 13:12 ____________________

   ____________________

2. யோவான் 12:24-25 வசனங்கள் கிறிஸ்தவ வாழ்வின் உருவகமாக உள்ளன. நீங்கள் தேவனால் பயன்படுத்தப்பட முற்றிலும் உங்களை விட்டுக் கொடுக்கும்படி, உங்கள் வாழ்க்கையில் எந்தக் காரியங்கள் "நிலத்தில் விழுந்து மடிய" வேண்டும்? ____________________

   ____________________

3. யோவான் 1:7 வாசிக்கவும்.

   அ. நம்மைச் சுத்திகரிப்பது அல்லது தூய்மையாக்குவது எது?_

   ஆ. அது எந்த அளவுக்கு பாவத்திலிருந்து சுத்திகரிக்கிறது?____

   இ. சுத்திகரிப்புக்கு அவசியமான நிபந்தனை என்ன?__________

   ____________________

   ஈ. உங்களைப் பொறுத்தவரை, "ஒளியில் நடப்பது" அல்லது ஒளியில் வாழ்வது என்றால் என்ன?____________________

   ____________________

4. ஆவியின் நிறைவைப் பெற்று முற்றிலும் பரிசுத்தமாகும் தகுதி யாருக்கு உண்டு? (அப்போஸ்தலர் 5:32)____________________

   ____________________

5. அப்போஸ்தலர் 1:4-5-ல் எந்த ஈவுக்காகக் காத்திருக்கும்படி இயேசு தம் சீஷரிடம் சொல்கிறார்?____________________

   ____________________

   ____________________

6. பரிசுத்த ஆவியைப் பெற ஜெபிப்பதைப் பற்றி இயேசு தம் சீஷருக்குச் சொல்லியிருந்தது என்ன? (லூக்கா 11:9–13)_______

_______________________________________________

7. ரோமர் 12:1–2 வசனங்களை வாசிக்கவும். இந்தச் "சகோதரர்கள்" (தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள்) தங்கள் சரீரத்தில் செய்யும்படி வலியுறுத்துப்படுவது என்ன? __________________

_______________________________________________

உங்களைப் பொறுத்தவரை, "உங்கள் சரீரத்தை ... தேவனிடம் ... ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பது" என்றால் என்ன?__________

_______________________________________________

8. சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது, இது நடக்க எவ்வளவு நேரமாகும்?

அ. அப்போஸ்தலர் 2:4 ______________________________

ஆ. அப்போஸ்தலர் 8:15–17 ___________________________

9. உங்களைப் பரிசுத்தமாக்குபவர் யார்? (1 தெசலோனிக்கேயர் 5:23)

_______________________________________________

10. நீங்கள் எப்படி ஆவியின் நிறைவைப் பெறுகிறீர்கள் அல்லது முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுகிறீர்கள்? (கலாத்தியர் 3:14)_____

_______________________________________________

11. ஸ்டான்லி ஜோன்ஸ் இரட்சிக்கப்பட்டு ஓராண்டு வரை மிகுந்த சந்தோஷத்துடன் வாழ்ந்தார். அதன் பின் அவருடைய வாழ்க்கையில் மோசமான கோபமும், மனநிலை மாற்றமும், அதிகமான முரண்பாடுகளும் ஏற்பட்டன. வாழ்க்கையின் பொதுவான குறிக்கோள் வெற்றியாக இருந்தாலும், இந்தக் காரியங்கள் இடையூறாக இருந்தன. அதைக் குறித்து அவர் இவ்வாறு எழுதினார்:

நான் பிரச்சனையில் இருந்தேன். உள்ளான இந்தப் போராட்டம் என்னைத் திணறடித்தது. அந்நிலையில், அந்தப் போராட்டத்திலிருந்து வெளியேற ஒரு வாசல் திறந்தது, அந்த வழி ஒரு புத்தகத்தின் வழியாகத் தோன்றியது. அந்தப் புத்தகத்தை ஒரு ஞாயிறு பள்ளி நூலகத்திலிருந்து எடுத்தபோது, அதை எடுத்ததில் ஒரு நிறைவான நோக்கம் இருப்பதாக உணர்ந்தேன். என் உடலில் ஒரு சிலிர்ப்பு தோன்றியது, அது எதிர்பார்ப்பினால் உண்டானதாக இருந்தது. *The Christian’s Secret of a Happy Life* [கிறிஸ்தவரின் மகிழ்ச்சி வாழ்க்கையின் இரகசியம்] என்ற அந்தப் புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்தேன், அதை புராட்டஸ்டன்ட் பிரிவைச் சேர்ந்த ஹான்னா விட்டல் ஸ்மித் என்பவர் எழுதியிருந்தார். அது, நம் முழுமையும் நிறைவான வெற்றி பெறுவதைப் பற்றிய புத்தகம்.

அதை வாசிக்கத் தொடங்கியபோது, என்னுள்ளம் கொளுந்து விட்டு எரியத் தொடங்கியது. நான் அதை வாசிக்கவில்லை, புசித்தேன் என்றே சொல்லலாம். அதன் நாற்பத்து இரண்டாவது பக்கத்திற்குச் சென்றபோது, "தேடுவதற்கான நேரம் இதுவே" என்று தேவன் என்னுடன் பேசினார்: ... நான் தொடர்ந்து வாசிக்க முயன்றேன், ஆனால் வார்த்தைகள் என் கண்களுக்கு முன்பாக மங்கலாகத் தொடங்கின... புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, படுக்கையினருகில் முழங்காற்படியிட்டு, "ஆண்டவரே, இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டேன். அதற்கு அவர், "உன்னை முழுவதுமாக எனக்குக் கொடுப்பாயா?" என்றார். "ஆம், ஆண்டவரே, நிச்சயமாகக் கொடுப்பேன். எனக்குத் தெரிந்தது, தெரியாதது என எல்லாவற்றையும் கொடுத்துவிடுவேன்" என்றேன். அப்போது அவர், "அப்படியானால், என்னை முழுவதும் எடுத்துக்கொள், பரிசுத்த ஆவியை எடுத்துக்கொள்" என்றார். நான் சற்று நிறுத்தி யோசித்தேன்: என்னை முழுவதும் கொடுத்தால், அவரை முழுவதும் கொடுக்கிறார்; என்னை முழுவதும் என்பது என்னைக் குறிக்கிறது, அவருடைய முழுமை என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. அதை ஒரு பெரிய பரிசாகக் கண்டேன். ஆவலுடன் அவரிடம்: "நான் பரிசுத்த ஆவியானவரை எடுத்துக்கொள்கிறேன்" என்றேன். அவருடைய வார்த்தையைத் தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லாமல், நான் முழங்காலில் இருந்து எழுந்து, அந்த வார்த்தையின் வாக்குத்தத்தத்தை மட்டும் கொண்டவனாக வெளியே சென்றேன். அந்த வார்த்தைக்குப் பின்னால் அவருடைய குணாதிசயம் இருந்தது ... அந்த அறை முழுவதும் நடந்து நடந்து, அதை ஏற்றுக்கொள்வதாக மீண்டும் மீண்டும் உறுதி செய்தேன். சந்தேகங்கள் மறையத் தொடங்கின. பறவைகள் பலிபொருளை எடுக்க வந்தபோது ஆபிரகாம் செய்தது போல சந்தேகங்களை விரட்டிவிட்டேன். அறை முழுவதும் நடந்து, பயமுறுத்தும் சந்தேகங்களை என் கைகளால் விரட்டிவிட்டேன். அப்போது திடீரென என்னை பரிசுத்த ஆவியானவர் நிரப்பினார். தேவ ஆவியானவர் அலையலையாக என்னுள் சென்று, சுத்திகரிக்கும் அக்கினியாக கிரியை செய்தார். ஆனந்தக் கண்ணீருடன் நடந்து கொண்டிருந்தேன். அவரைத் துதிப்பதைத் தவிர வேறொன்றும் என்னால் செய்ய முடியவில்லை. எனவே துதித்துக் கொண்டிருந்தேன். அது கடந்து போகும் ஒரு உணர்ச்சி அல்ல என்பதை அறிந்தேன்; பரிசுத்த ஆவியானவர் என்றென்றும் என்னோடு இருக்கும்படி வந்திருந்தார்.

(ஈ. ஸ்டான்லி ஜோன்ஸ், *A Song of Ascents* [ஆரோகண சங்கீதம்],
நாஷ்வில்: அபிங்டன் ப்ரெஸ், 1968.)

இந்த சாட்சியைக் குறித்த உங்கள் கருத்து என்ன?__________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

12. இந்தப் பாடத்தில், பரிசுத்தமாகிறவர்களுக்கு அல்லது ஆவியால் நிரப்பப்படுகிறவர்களுக்கான சில கருப்பொருள்கள் மீண்டும் மீண்டும் வருவதைக் கவனித்திருப்பீர்கள்:

அ. அக்கறை. அப்போஸ்தலர் 1:12–14 மற்றும் லூக்கா 11:9–10, 13 (கேள்வி 6)

ஆ. சுத்திகரிப்பு. 1 யோவான் 1:7 (கேள்வி 3)

இ. பரிசுத்தப்படுத்துதல். ரோமர் 6:13 மற்றும் ரோமர் 12:1–2 (கேள்வி 7–8)

ஈ. உரிமை கோருதல். அப்போஸ்தலர் 26:18 மற்றும் கலாத்தியர் 3:14 (கேள்வி 11)

உங்கள் வாழ்க்கையில் ஆவியின் நிறைவு வேண்டி அல்லது ஆவியால் நிரப்பப்பட்டதர்காக நன்றி செலுத்தி ஒரு ஜெபத்தை எழுதவும். ____________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

தேவன் உங்களுக்காக செய்திருப்பது என்ன?________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

தேவன் செய்தவற்றிற்காக அவரைத் துதியுங்கள்!

ஆவியினால் நிரப்பப்பட்ட (அல்லது முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்ட)

பின்னர், அந்த உறவில் தொடர்வது அவசியம். ஆகவே, கிறிஸ்தவர்கள் ஆவியில் நடக்க அல்லது ஆவியில் வாழ வேண்டும். பரவசமாகத் தொடரும் அந்த உறவைப் பற்றி அடுத்த பாடத்தில் காணலாம்.

## மனன வசனம்

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார் (1 தெசலோனிக்கேயர் 5:23-24).

# 6 ஆவியில் நடத்தல்

ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவருக்கு வாழ்க்கை புதிய தன்மையுடன் தொடங்குகிறது. இது முடிவல்ல, மாறாக பரவசத்துடன், நொடிக்கு நொடி ஆவியானவரைச் சார்ந்து கொள்ளும் அனுபவத்தின் தொடக்கமாக இருக்கிறது. அதனை, கலாத்தியர் 5:25 "ஆவிக்கேற்றபடி நடத்தல்" என்றும், ரோமர் 8:4 "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடத்தல்" என்றும் குறிப்பிடுகின்றன.

1. கொலோசெயர் 1:21-23 வாசிக்கவும்.

   அ. கிறிஸ்துவின் மரணம் கொலோசெயருக்குக் கொடுத்தது என்ன?______________________________

   ________________________________________

   ஆ. தேவன் அவர்களை எப்படி நிறுத்துவார்?________________

   ________________________________________

   இ. அவர்கள் செய்ய வேண்டியது என்ன? (1:23)______________

   ________________________________________

2. நாம் தொடர்ந்து செய்யும்படி ரோமர் 12:2 வலியுறுத்துவது என்ன? __________________________________

   ________________________________________

   ________________________________________

   உங்கள் மனம் புதிதாகி நீங்கள் மறுரூபமாவதற்கான சில வழிகள் யாவை? ____________________________

   ________________________________________

   ________________________________________

   ________________________________________

3. 1 தெசலோனிக்கேயர் 5:23-ல், தேவன் உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக என்று பவுல் ஜெபிக்கிறார். அதன் நீடித்த பலன்கள் யாவை? ____________________________

   ________________________________________

   ________________________________________

   பாதுகாப்பவர் அல்லது காப்பவர் யார்? (1 தெசலோனிக்கேயர் 5:24) __________________________________

   ________________________________________

தேவன் தம் மக்களைக் காக்கும் வழிகள் யாவை?___________

___________________________________________

___________________________________________

4. கலாத்தியர் நிருபத்தில், ஆவியானவருடன் தொடர்ந்து உறவு கொண்டிருப்பதைக் குறிக்கும் வாக்கியங்கள் எவை?

அ. கலாத்தியர் 5:16-18 ____________________________

___________________________________________

ஆ. கலாத்தியர் 5:25 ______________________________

எந்த வாக்கியம் உங்களுக்கு அதிக அர்த்தமுள்ளதாக இருக்கிறது? ஏன்?______________________________

___________________________________________

___________________________________________

5. ரோமர் 8:1-4, 8-9 வசனங்களை வாசிக்கவும்.

அ. ஆவியானவர் பவுலுக்குச் செய்தது என்ன? (வசனம் 2, "விடுதலையாக்கிற்றே" என்ற பதம் ஒரு கணப்பொழுதில் செய்யப்பட்ட ஒன்றைக் குறிக்கிறது.)

___________________________________________

ஆ. நியாயப்பிரமாணம் கோருவதை நமக்குள் நிறைவேற்ற செய்ய வேண்டியது என்ன? (ரோமர் 8:4)__________________

___________________________________________

___________________________________________

இ. பாவ சுபாவத்தினால் (அல்லது "மாம்சத்தினால்") ஆளப்படாமல் உங்களைக் காப்பது எது? (ரோமர் 8:8-9)

___________________________________________

___________________________________________

ஈ. நீங்கள் ஆவியினால் நடத்தப்பட்டால் உங்கள் வாழ்க்கையில் எப்படிப்பட்ட குறிப்பான பழக்கவழக்கங்கள் இருக்கும்?

(1) ________________________________________

(2) ________________________________________

(3) ________________________________________

6. உங்களை நிரப்புவதைத் தவிர பரிசுத்த ஆவியானவர் உங்களுக்காகச் செய்யும் மற்ற காரியங்கள் யாவை?

அ. அப்போஸ்தலர் 1:8 ____________________________

ஆ. அப்போஸ்தலர் 9:31 ___________________________

இ. அப்போஸ்தலர் 13:4 ________________________________

ஈ. அப்போஸ்தலர் 20:28 ________________________________

உ. ரோமர் 8:14 ________________________________

ஊ. ரோமர் 8:26 ________________________________

ஆவியானவர் உங்களை நிரப்பியதிலிருந்து உங்களுக்காகச் செய்த ஒரு காரியம் என்ன? ________________________________

________________________________

7. 1 யோவான் 2:1-2-ன்படி, பாவத்திற்கு உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் இடமில்லை; ஆனால், பாவம் செய்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்? ________________________________

________________________________

________________________________

1 யோவான் 1:7-ல் உள்ள தொடர்ச்சியான சுத்திகரிப்பைக் குறித்த வாக்குத்தத்தம் என்ன? ________________________________

________________________________

உங்களைப் பொறுத்தவரை, “ஒளியில் நடப்பது” அல்லது ஒளியில் வாழ்வது என்றால் என்ன? ________________________________

________________________________

8. அப்போஸ்தலர் 2:4 மற்றும் அப்போஸ்தலர் 4:31-ல், மக்கள் ஆவியினால் நிரப்பப்படுகிறார்கள். தேவ ஆவியானவரின் தொடுதல் எப்போது உங்களுக்குத் தேவைப்பட்டது அல்லது அதை எப்போது பெற்றீர்கள்? ________________________________

________________________________

________________________________

9. நீங்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு, முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்ட பின், தினமும் ஆவியில் நடந்து தேவனுடனான உங்கள் உறவைக் காத்துக் கொள்வது அவசியம். தேவனுடனான நம் உறவில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், உடனே அதைச் சரிசெய்ய நாட வேண்டும் (1 யோவான் 2:1). மாபெரும் மிஷினரியும், சைனா இன்லான்ட் மிஷனின் நிறுவனருமான ஹட்சன் டெய்லர் இதற்கு நல்ல உதாரணமாகத் திகழ்கிறார். அவர் தம் 17-ஆம் வயதில் இரட்சிக்கப்பட்டவுடனே பரிசுத்தமாக்கப்பட்டார். இருப்பினும், பல வருடங்கள் நற்செய்தி பணி செய்த பின்பு, அவருக்கு பதட்டமும், கோபமும் கொண்டவராக மாறினார். அவர் இவ்வாறு எழுதுகிறார்:

இரட்சகரின் வார்த்தைகளை மாற்றாதிருப்போம். அவர், "ஜீவத்தண்ணீரைக் குடித்தவனுக்கு" என்றல்ல,

"குடிக்கிறவனுக்கு" என்றே கூறினார் (யோவான் 4:14). அவர், எப்போதோ ஒருமுறை வரும் அல்லது பலமுறை வரும் வறட்சியைப் பற்றி அல்ல, மாறாக ஆத்துமாவின் தொடர்ச்சியான நிலையைப் பற்றியே சொல்கிறார். "எப்போதும் என்னிடம் வருவதை வழக்கமாக்கிக் கொண்டவனுக்கு பசியும், என்னை விசுவாசிக்கிறவனுக்கு தாகமும் இராது" என்பதே யோவான் 6:35-ன் முழு அர்த்தமாக உள்ளது.

என்னைப் பொறுத்தவரை, கடந்த காலத்தில் குடித்ததோடு விட்டுவிட்டு, இப்போது தாகத்துடன் இருக்கும் தவறை நம்மில் பலர் செய்கிறோம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் – ஜீவத்தண்ணீரைஅதிகமதிகமாகப் பருக நம்மை நடத்தும் ஒவ்வொரு தருணத்திற்ககாகவும் நன்றி.

(ஹோவர்ட் டெய்லர், *Hudson Taylor's Spiritual Secret* [ஹட்சன் டெய்லரின் ஆவிக்குரிய இரகசியம்], சிகாகோ, மூடி கைபில் இன்ஸ்டிடியூட், தேதியிடப்படவில்லை.)

இந்த சாட்சியிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? __________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

10. ஆவியில் நடக்க நீங்கள் செய்ய வேண்டிய மூன்று முக்கிய காரியங்கள் யாவை?

அ. ________________________________________

ஆ. ________________________________________

இ. ________________________________________

ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியில் நடக்கும் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஆவியானவர் செய்யக் கூடியவற்றின் வரம்புகளை அறிந்திருக்க வேண்டும். சில காரியங்கள் பரலோகத்தில் செய்யப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வரம்புகளைப் பற்றி அடுத்த பாடத்தில் காண்போம்.

## மனன வசனம்

மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார் (ரோமர் 8:4).

# 7 பரலோகத்திற்கு இப்புறத்தில் இருக்கும் வரம்புகள்

ஆவியில் நிறைந்து, ஆவியில் நடக்கும் கிறிஸ்தவர் அருமையான ஆவிக்குரிய வெற்றியை பெற்று அனுபவிப்பார். இருப்பினும், இவ்வுலக வாழ்க்கையில் தேவன் அந்த கிறிஸ்தவருக்குச் செய்யும் காரியங்களில் ஒரு வரம்பு உண்டு. ஆவியில் நிறைந்து, பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை தேவன் வாக்குப்பண்ணியதற்கு மேலாக இருக்கும் என்று எதிர்பார்க்காதிருங்கள். சில காரியங்கள் பரலோகத்திற்கென்று வைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

1. ரோமர் 8:2, 18-27 வசனங்களை வாசிக்கவும்.

   அ. 8:2-ன்படி, ஆவியானவர் பவுலுக்குச் செய்தது என்ன?_____

   ________________________________________

   ஆ. கிறிஸ்தவர்களுக்கு இன்றைய உலகம் எப்படி இருக்கிறது?

   (1) வசனம் 18 ____________________________

   (2) வசனம் 20 ____________________________

   (3) வசனம் 22 ____________________________

   இ. ஆவியானவர் நம்மை பாவம், மரணம் ஆகியவற்றின் பிரமாணங்களிலிருந்து விடுதலையாக்கினாலும், பாடு நிறைந்த உலகில்தான் இன்னும் நாம் வாழ்கிறோம். சோதனைகளின் மத்தியில் ஆவியானவர் நமக்குச் செய்வது என்ன? (8:26)_____

   ________________________________________

2. தேவன் பவுலின் வாழ்க்கையில் பலவீனத்தை எப்படிப் பயன்படுத்தினார்? (2 கொரிந்தியர் 12:9)____________________

   ________________________________________

   ________________________________________

3. கிறிஸ்து தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவராக, பாவமின்று இருந்தாலும் (1 பேதுரு 2:21-22), மனிதனாக வாழ்ந்த சமயத்தில் அவரும் குறைவுகளையும், சிரமங்களையும், வேதனையையும், பாடுகளையும் அனுபவிக்கத்தான் செய்தார். அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுக.

   அ. மத்தேயு 13:57 ____________________________

   ஆ. மத்தேயு 26:38-40____________________________

   இ. லூக்கா 4:1-2 ____________________________

ஈ. லூக்கா 19:45 ______________________

உ. யோவான் 11:35 ______________________

ஊ. நீங்கள் கடந்து சென்ற எந்த அனுபவம் கடினமாகவும், அதேசமயம் கிறிஸ்துவின் சாயலுக்கு ஏற்றதாகவும் இருந்தது?

______________________

______________________

4. எபிரெயர் 4:15 வாசிக்கவும்.

அ. இயேசு எந்த அளவுக்கு சோதிக்கப்பட்டார்? ______________________

______________________

ஆ. சோதனை நேரத்தில் அவர் எப்படி நடந்துகொண்டார்? ______

______________________

இ. சோதனைக்கும், பாவத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

______________________

5. நீங்கள் சோதிக்கப்படும் வேளைக்காக தேவன் உங்களுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம் என்ன? (1 கொரிந்தியர் 10:13) ______

______________________

______________________

6. கிறிஸ்தவர்கள் எது சரி, எது தவறு என்று எப்படி அறிவார்கள்?

அ. 1 யோவான் 2:6 ______________________

______________________

ஆ. எபேசியர் 5:10 ______________________

7. பயம் போன்ற உணர்வுகளை நாம் கையாளும் விதம் பாவமாகவோ அல்லது மாம்சீகமாகவோ இருக்கலாம். பேதுரு பயத்தை எதிர்கொண்ட இவ்விரு இடங்களையும் பற்றி வாசியுங்கள். அவருடைய பதில் செயல்பாடுகளில் எது பாவமாக இருந்தது, எது மனுஷீகமாக இருந்தது? ஏன்? (மாற்கு 14:66–71 மற்றும் அப்போஸ்தலர் 4:29–31) ______________________

______________________

______________________

8. பவுலின் ஆவிக்குரிய நிலை எப்படி இருந்தது? (அப்போஸ்தலர் 13:9) ______________________

______________________

எபேசியர் 6:12-ல் அவர் சந்தித்த போராட்டம் அல்லது கஷ்டம் என்ன? ______________________

2 கொரிந்தியர் 11:28-ல் அவர் சந்தித்தது என்ன?______________

ஆவியில் நிறைந்தவர்கள் சந்திக்கும் போராட்டங்கள் அல்லது பாரங்களாக நீங்கள் கண்டவை யாவை?____________________

9. மத்தேயு 5:48-ல் இயேசு தம் சீஷருக்குக் கொடுத்த கட்டளை என்ன? ____________________

மத்தேயு 5:43-47-ன்படி, அவர்கள் வாழ்க்கையின் எந்தப் பகுதியில் "பரிபூரணமாக" இருக்க வேண்டும்? ("பரிபூரணம்" என்பதற்கு ஒரு காரியம் எதற்காக உண்டாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றி முடித்தல் என்று அர்த்தம்.) ____________________

மத்தேயு 22:37-40-ல் இந்த அன்பின் வலியுறுத்தல் எப்படி உணர்த்தப்படுகிறது?____________________

நியாயத்தீர்ப்பைக் குறித்த பயத்தை நீக்க மிகச் சிறந்த வழி எது? (1 யோவான் 4:17-18) ____________________

அன்பு எங்கிருந்து வருகிறது? (கலாத்தியர் 5:22)______________

அன்பு செய்வது என்ன? (ரோமர் 13:9-10)____________________

10. நீங்கள் ஆவியால் நிரப்பப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட பின், தேவன் உங்களிடம் எதிர்பார்ப்பது என்ன?

அ. கொலோசெயர் 1:22-23____________________

ஆ. (கலாத்தியர் 5:25) ____________________

இ. பிலிப்பியர் 4:8 ____________________

11. கிறிஸ்தவர்களுக்கு பாடுகள், சோதனைகள் அல்லது உபத்திரவத்தின் முக்கியத்துவம் என்ன? (ரோமர் 5:3-5)________

12. நாம் பரலோகத்தில் எதை எதிர்பார்த்திருக்கிறோம்? (1 யோவான் 3:2) ______________________________

______________________________

அந்த வேளைக்காக இங்கு, இப்போது நாம் செய்வது என்ன? (1 யோவான் 3:3)______________________________

______________________________

13. பரலோகம் எந்தப் பிரச்சனைகளுக்கு ஈடு செய்யும்? (வெளிப்படுத்தின விசேஷம் 21:4)______________________________

______________________________

இது யாருக்கு வாக்குப்பண்ணப்படுகிறது? (வெளிப்படுத்தின விசேஷம் 21:7) ______________________________

______________________________

14. ஆவியில் நிறைந்த கிறிஸ்தவரும் பிரச்சனைகளையும், சோதனைகளையும், யுத்தங்களையும் எதிர்கொள்ள வேண்டியதிருக்கும். ஹான்னா விட்டல் ஸ்மித் எழுதிய *The Christian's Secret of a Happy Life* [கிறிஸ்தவரின் மகிழ்ச்சி வாழ்க்கையின் இரகசியம்] என்னும் புத்தகம் உலகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய கிறிஸ்தவ புத்தகங்களில் ஒன்றாக இருக்கிறது. அந்த யுத்தம் கர்த்தருடையதாக மாறுவது என்றால் என்ன என்பதை அவர் கண்டறிந்தார்:

1856-ல் எனக்கு இருபத்தாறு வயதானபோது நான் இரட்சிக்கப்பட்டேன். காலம் செல்லச் செல்ல கர்த்தர் கிருபையாக என்னை சத்தியத்தை அறியும் அறிவுக்குள் அதிகமாக நடத்தினார். ஆனால் என் இருதயம் எளிதில் பலவீனமடைந்து கொண்டிருந்தது. என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் எட்டாம் ஆண்டின் முடிவில், இரட்சிக்கப்பட்ட புதிதில் இருந்த அளவிற்குக் கூட என்னால் அப்போது பாவத்தை மேற்கொள்ள முடியவில்லை என்பதை துக்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருந்தது.

நான் பரிசுத்தத்திற்காக ஏங்கத் தொடங்கினேன். பாவத்தின் கட்டில் பெருமூச்சோடு வாழத் தொடங்கிய நான் இன்னும் அதன் பிடியில்தான் இருந்தேன். ஆனால், என்னதான் முயற்சி செய்தாலும், தீர்மானமாக இருந்தாலும், ஜெபம் செய்தாலும் என் சொந்த முயற்சிகள் வீணாகவே இருக்கும் என்பதை உறுதியாக அறிந்திருந்தேன். விடுதலை அடைய வேறு எந்த வழியும் தெரியாததால், விரக்தியடைந்து ஏறக்குறைய விசுவாசத்தை விட்டுக்கொடுத்து விட ஆயத்தமாகிவிட்டேன்.

இத்தகைய கடும் தேவையின் நேரத்தில் (1863), தேவன் என்னிலிருந்து மாறுபட்ட அனுபவங்களைக் கொண்டவர்களின் நட்புறவு எனக்குக் கிடைக்கும்படிச் செய்தார். அவர்கள்,

மீட்கப்பட்ட ஆத்துமா நிலையான சமாதானத்தைப் பெற்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் "முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக" திகழக் கூடும் ஒரு "பரிசுத்த வழியை" கண்டறிந்திருப்பதாக எனக்கு அறிவித்தார்கள்.

அவர்களின் இரகசியம் என்னவென்று கேட்டபோது, "அது மிக எளிது, நம் சொந்த முயற்சிகள் அனைத்தையும் விட்டு, பரிசுத்தமாக கர்த்தரை மட்டும் நம்பியிருக்க வேண்டும்" என்று சொன்னார்கள்.

இந்த பதில் என்னுள் ஏற்படுத்திய வியப்பை என்னால் மறக்கவே முடியாது ...

இத்தகைய வாழ்வின் மகிமையான சாத்தியங்கள் ஒரு வெளிப்பாட்டைப் போல் பளிச்சிட்ட அதே நேரத்தில் அந்த யோசனை என்னால் கிரகிக்க முடியாத அளவிற்கு புதிதாகவும், அருமையாகவும் இருந்தது. அனுதின வாழ்க்கையைப் பொறுத்தவரை நான் முற்றிலும் அறநெறி சார்ந்த எண்ணங்களைக் கொண்டிருந்திருக்கிறேன். அதற்காக கர்த்தரை நம்ப முடியும் என்று கனவில் கூட நினைக்கவில்லை, அவரை எப்படி அதற்காக நம்புவது என்றும் தெரியவில்லை... எனவே, வேதத்தைப் புதிதாக ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினேன். இயேசு மரித்து நமக்கு அருளிச் செய்த இரட்சிப்பு பரிபூரணமானது என்பதைக் கண்டேன். அவர் என் இருதயத்திற்குள் வந்து, அதை முழுமையாக சொந்தமாக்கிக் கொண்டு, அதிலிருக்கும் அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ள நினைக்கிறார் என்பதையும் அறிந்தேன். அவர் தம்மை முழுமையான மற்றும் எப்போதும் என்னோடு இருக்கும் இரட்சகராக காண்பித்தபோது, என் சுயம் முழுவதையும் அவருடைய பரமாரிப்பின் கீழ் விட்டுக்கொடுத்தேன்; இந்தக் காரியங்கள் அனைத்தையும் அவர் தம் சர்வவல்லமையால் என்னில் நடப்பிக்கும்படி இருந்த வண்ணமாகவே அவருடைய அன்பில் சமுத்திரத்திற்குள் என்னை ஒப்புவித்துவிட்டேன். அவரே நடைமுறையில் என் பரிசுத்தமாகுதலும், நீதியும் என்பதை விசுவாசித்தபோது, ஒருவழியாக என் ஆத்துமா இளைப்பாறுதல் அடைந்தது, அந்த இளைப்பாறுதலை வார்த்தையால் விவரிக்க முடியாது – சொந்த அறநெறி சார்ந்த முயற்சிகளிலிருந்தும், களைப்புறச் செய்யும் முரண்பாடுகளிலிருந்தும், கசப்பான தோல்விகளிலிருந்தும் என் ஆத்துமா இளைப்பாறியது. பரிசுத்தத்தின் இரகசியம் எனக்கு வெளிப்படுத்தப்பட்டது – அந்த இரகசியம் கிறிஸ்துவே. என் ஆத்துமா உள்ளான இளைப்பாறுதலில் அல்லது பவுல் எபிரெயர் 4:9-ல் அறிவிக்கும் "தேவனுடைய ஜனங்களுக்கு இனி வருகிறதாயிருக்கிற" "இளைப்பாறுகிற காலத்திற்குள்" பிரவேசித்தது. அதன்பின் முரண்பாடுகள் ஏற்படவே இல்லை என்று சொல்ல முடியாது,

ஆனால் அந்த யுத்தம் என்னுடையதாயிருக்கவில்லை, அது கிறிஸ்துவுடையதாயிற்று.

என் கிறிஸ்தவ வாழ்க்கையின் அதற்கு முந்தைய காலமெல்லாம் வீணானதாகத் தோன்றியது. நான் தேவனுடைய பிள்ளையாக இருந்தேன் என்பது உண்மைதான், ஆனால் என் வளர்ச்சி குன்றியதாகவும், உருவம் மென்மையாகவும் இருந்தது. விசுவாசத்தின் இந்த இரகசியம் வெளிப்பட்டபோதோ, நான் வளரத் தொடங்கினேன்; முன்பு எனக்கு சாத்தியமற்றதாகத் தோன்றிய அர்ப்பணிப்பு இப்போது என் இருதயத்தின் மகிழ்ச்சியாயிற்று.

விசுவாசித்தல், இளைப்பாறுதல், நிலைத்திருத்தல், கீழ்ப்படிதல் – இவை மட்டுமே நான் செய்ய வேண்டியவை; மற்ற அனைத்தையும் அவர் பார்த்துக் கொள்வார். அன்பின் அதீத உயரமும், ஆழங்களும், கரிசனையின் எல்லையற்ற மென்மையும், ஒழுக்கத்தின் ஞானமுள்ள நேசமும், காத்தலின் மகிமையும், வெளிப்பாட்டின் அதிசயமும், பலவீனத்தில் பலமும், துக்கத்தில் ஆறுதலும், இருளில் வெளிச்சமும், பாரம் இலகுவானதும் – இவையே நான் கண்டவை; எத்தனை அருமையான தேவன், எத்தனை மேலான இரட்சகர் – அவரை வார்த்தையால் விவரிக்க முடியாது!

(ஜே. சிட்லோ பாக்ஸ்டர், *His Deeper Work in Us* [நம்மில் அவரின் ஆழமான கிரியை], கிராண்ட் ராப்பிட்ஸ்: ஸான்டர்வான் பப்ளிஷிங் ஹவுஸ், 1967. 81–82.)

15. உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள்.

அ. உங்கள் வாழ்க்கையின் எந்தப் பிரச்சனைகளை இவ்வுலக வாழ்க்கையில் தேவன் சரிசெய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமற்றது? ____________________

____________________

ஆ. எந்தப் பகுதியை நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டும ______

____________________

இ. எந்தப் பகுதியில் தேவன் உங்களுக்கு வெற்றி கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்? ____________________

____________________

ஈ. அந்த வெற்றியை அடைய நீங்கள் எடுக்க வேண்டிய அடுத்த முயற்சி என்ன? ____________________

____________________

____________________

ஆவியில் நிறைந்த ஒரு கிறிஸ்தவரால் யதார்த்தமாக வாழ்க்கையை எதிர்கொள்ள முடியும். தேவன் எல்லா பிரச்சனைகளையும் நீக்குவதில்லை என்றாலும், உங்கள் வாழ்க்கையின் மூலம் தேவன் கிரியை செய்யும் சில வல்லமையான வழிகள் உண்டு. இவற்றில் சிலவற்றைப் பற்றி அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

## மனன வசனம்

அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன் (2 கொரிந்தியர் 12:9).

# 8 உங்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் செய்யும் காரியங்கள்

நீங்கள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கையில் அருளும் பலன்கள் ஏராளம் உண்டு. நீங்கள் இன்னும் பிரச்சனை நிறைந்த உலகத்தில்தான் வாழ வேண்டும் – ஆனால் உங்கள் இருதயத்தில் சமாதானத்தையும், தூய்மையையும் அருளும் அதே பரிசுத்த ஆவியானவர் வல்லமையான விதங்களில் உங்கள் மூலமாக ஆசீர்வாதமான காரியங்களைச் செய்வார்.

1. அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள சில பரிசுத்தவான்களைக் குறிக்கும் வேதவசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குள்ளும், அவர்கள் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் செய்ததைக் குறிப்பிடுக.

   அ. பேதுருவுக்குள் (அப்போஸ்தலர் 4:8)____________________

   பேதுரு மூலமாக (அப்போஸ்தலர் 4:9–12)________________

   ஆ. ஸ்தேவானுக்குள் (அப்போஸ்தலர் 7:55)________________

   ஸ்தேவான் மூலமாக (அப்போஸ்தலர் 7:59–60)___________

   இ. பர்னபாவுக்குள் (அப்போஸ்தலர் 11:24)__________________

   பர்னபா மூலமாக (அப்போஸ்தலர் 11:24)_________________

   ஈ. பவுலுக்குள் (அப்போஸ்தலர் 13:9)______________________

   பவுல் மூலமாக (அப்போஸ்தலர் 13:10–12)________________

2. முதலாம் சபைக் குழுமத்தின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட பிலிப்புவைப் பற்றிய குறிப்பிட்ட சில காரியங்களைக் காண்போம்.

   அ. மிகக் குறிப்பாக, சபையில் பிலிப்புவின் பதவி என்னவாக இருந்தது?

   (அப்போஸ்தலர் 6:1–5) ________________________________

   ______________________________________________

   ஆ. அவர் யாருக்கு சாட்சி கொடுத்தார், அந்த சாட்சி ஏன் முக்கியமானதாக இருக்கிறது?

   (அப்போஸ்தலர் 8:26–27) ______________________________

   ______________________________________________

இ. பிலிப்பு எந்த அளவிற்கு பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலை உணர்பவராக இருந்தார்? (அப்போஸ்தலர் 8:29-30) ____________________

____________________

ஈ. பிலிப்புவின் வல்லமை மற்றும் திறமையின் இரகசியம் என்ன? (அப்போஸ்தலர் 6:3, 5)____________________

____________________

3. கிறிஸ்து "தமக்குரிய சொந்த ஜனங்களாக ... ஒரு கூட்ட மக்களைச் சுத்திகரிக்கும்படி" தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தபோது, தங்களைச் சுற்றியிருக்கும் உலகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் அதே மக்களுக்காக அவர் கொண்டிருந்த நோக்கமென்ன? (தீத்து 2:14)____________________

____________________

____________________

4. அப்போஸ்தலர் 4:31-35-ல் உள்ள ஆவியில் நிறைந்த அப்போஸ்தலர்களின் மனதுருக்கத்தினால் தேவையுள்ளவர்கள் மீது ஏற்பட்ட தாக்கம் என்ன? ____________________

____________________

____________________

5. ஆவியில் நிறைந்த கிறிஸ்தவர் ஒருவர் தேவையில் இருக்கும் ஒருவருக்கு உதவியதைப் பற்றி விவரிக்கவும்.____________________

____________________

____________________

6. கடினமான நேரத்தில் அனுபவிக்கும் அன்பு மற்றும் சந்தோஷத்தின் வல்லமை அப்போஸ்தலர் 7:55-60-ல் உள்ள விசுவாசிகள் வாழ்க்கையிலும், அப்போஸ்தலர் 16:25-ல் பவுல், சீலாவின் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. அன்பு, சந்தோஷம் என்னும் பண்புகளின் ஊற்று எது அல்லது யார்? (கலாத்தியர் 5:22) ____________________

____________________

7. நீங்கள் எப்படித் தமக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்? (லூக்கா 1:74-75)____________________

_______________________________________________

8. சாதாரண மனிதர்கள் தேவனுக்காக விசேஷித்த காரியங்கள் செய்வதைக் கவனியுங்கள்.

அ. தேவனுக்காக விசேஷித்த ஊழியங்களைச் செய்யும் திறமையை மனிதர்கள் எங்கு பெற்றுக்கொள்கிறார்கள்? (1 கொரிந்தியர் 12:4-6) _______________________________________________

_______________________________________________

ஆ. வரங்களின் பயன்பாட்டை எது ஆளுகை செய்ய வேண்டும்? (1 கொரிந்தியர் 12:7)____________

_______________________________________________

_______________________________________________

இ. பின்வரும் வேதப்பகுதிகளில் வரங்கள், திறமைகள் மற்றும் கிருபைகளின் பட்டியலை வாசித்து, ஒவ்வொரு பட்டியலிலும் இருந்து ஒரு வரத்தைக் குறிப்பிடுக.

(1) 1 கொரிந்தியர் 12:8-11 ______________________________

(2) ரோமர் 12:6-8 ____________________________________

(3) எபேசியர் 4:11-12 _________________________________

(4) 1 பேதுரு 4:9-11 __________________________________

ஈ. தேவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதாக நீங்கள் நினைக்கும் வரங்கள் யாவை, எதிர்காலத் தேவைகளைச் சந்திக்க அவற்றை எப்படிப் பயன்படுத்துவீர்கள்?______________

_______________________________________________

_______________________________________________

9. தேவன் தம் வல்லமையை எங்கு உங்களுக்குக் கொடுக்கிறார்? (எபேசியர் 3:16) ___________________________________________

_______________________________________________

10. தம் ஊழியத்தை எப்படி நடத்த வேண்டுமென்று பவுல் அறிந்தது எப்படி? (அப்போஸ்தலர் 13:2, 16:7)__________________________

_______________________________________________

11. கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு சாத்தியமற்றதாகத் தோன்றும் எந்தப் பணியைக் கொடுக்கிறார்? (மத்தேயு 28:19-20, லூக்கா 24:46-48) ______________________________________

_______________________________________________

அ. இந்தப் பணியை நிறைவேற்ற அவர்களுக்குத் தேவையாக இருந்தது எது? (லூக்கா 24:49)____________________________

______________________________________________________________

ஆ. அந்தத் தேவை எப்படி சந்திக்கப்படும்? (அப்போஸ்தலர் 1:8)_

______________________________________________________________

இ. அப்போஸ்தலர் 1:8-ல் உள்ள இந்த வாக்குத்தத்தத்தை தேவன் எப்படி நிறைவேற்றினார்? (அப்போஸ்தலர் 2:4-12)

______________________________________________________________

ஈ. பேதுருவும், மற்ற சீஷரும் ஆவியால் நிறைந்திருந்தார்கள். அவர்கள் பிரசங்கம் செய்து, சாட்சி கொடுத்தபோது, அப்போஸ்தலர் 2:41-ல் நடந்தது என்ன?____________________

______________________________________________________________

______________________________________________________________

உ. நீங்கள் சாட்சி கொடுக்க ஆவியானவர் உதவிய தருணத்தைப் பற்றிச் சொல்க. ____________________________________________

______________________________________________________________

12. உங்கள் வாழ்க்கையில் தேவன் கிரியை செய்வதைத் தடுக்கும் காரியங்கள் ஏதேனும் உண்டா?

______________________________________________________________

______________________________________________________________

13. சாமுவேல் லோகன் ப்ரெங்கிள் இரட்சண்ய சேனை நிறுவனத்தில் அதிகாரியாக இருந்தார். பத்து இலட்சத்திற்கும் மேலான அவருடைய புத்தகப் பிரதிகள் உலகம் முழுவதையும் ஆசீர்வதித்திருக்கின்றன. அவருடைய கதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

ஜனவரி 9, 1885 அன்று காலை ஒன்பது மணியளவில், தேவன் என் ஆத்துமாவை பரிசுத்தப்படுத்தினார். அந்த நேரத்தில் என் அறையில் இருந்த நான், சில நிமிடங்களில் வெளியே சென்று, ஒருவரை சந்தித்து, தேவன் எனக்குச் செய்ததைச் சொன்னேன். அடுத்தநாள் காலையில், தெருவில் இன்னொரு நண்பரை சந்தித்து, ஆசீர்வாதமான அந்தக் கதையைப் பகிர்ந்து கொண்டேன். ஆர்ப்பரித்து தேவனைத் துதித்த அவர், பூரண சுவிசேஷத்தை பிரசங்கித்து, அதை எங்கும் அறிக்கை செய்யுமாறு வலியுறுத்தினார். என்னை உற்சாகப்படுத்தவும், உதவவும் தேவன் அவரைப் பயன்படுத்தினார். ஆகவே, அடுத்தநாள் இந்தக் காரியத்தைப் பற்றித் தெளிவாகவும், உறுதியாகவும் பிரசங்கித்து, என் சாட்சியை சொல்லி நிறைவு செய்தேன்.

பிறருக்கு சொன்ன அந்த வார்த்தைகளை தேவன்

வல்லமையாக ஆசீர்வதித்தார். அதைவிட அந்த வார்த்தையைக் கொண்டு என்னையே அதிகமாக ஆசீர்வதித்தார் என்று நினைக்கிறேன். அந்த அறிக்கையிடுதல் பெரும் பதிவாகியது. எனக்குப் பின்பாக இருந்த தடைகளை உடைத்தெறிந்தது. தேவன் தனக்கு சுத்த இருதயத்தைக் கொடுத்திருக்கிறார் என்று அறிக்கையிட்டவனாக மூன்று உலகங்கள் என்னை உற்றுப் பார்க்கத் தொடங்கின. இனி என்னால் பின்வாங்க முடியாது. முன்னேறித்தான் செல்ல வேண்டும். நான் மரண பரியந்தம் உண்மையுள்ளவனாக இருப்பேன் என்று நினைத்ததை தேவன் பார்த்தார். ஆகவே, இரண்டு நாட்களுக்குப் பின், காலை எழுந்து, இயேசுவின் வார்த்தைகளை வாசித்துக் கொண்டிருந்தபோது, பரலோகத்திற்குச் செல்வதற்கு முன்பே இவ்வுலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாராலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு ஆசீர்வாதத்தை அவர் எனக்குக் கொடுத்தார். அன்பு நிறைந்த பரலோகமே என் இருதயத்திற்குள் வந்துவிட்டது. காலை உணவு வேளைக்கு முன்னர், பாஸ்டன் காமனில் ஆனந்த கண்ணீர் விட்டு, தேவனைத் துதித்து நடந்து சென்றேன். ஓ, அந்தத் தருணம் எவ்வளவு நன்றாக இருந்தது! என் இருதயம் உடைந்து போகுமளவிற்கு இயேசுவை அறிந்து, அவரை நேசித்தேன். குருவிகளையும், நாய்களையும், குதிரைகளையும், தெருவில் இருந்த சிறு பிராணிகளையும், என்னைக் கடந்து சென்ற அன்னியர்களையும், புறஜாதியாரையும் நேசித்தேன் – முழு உலகத்தையுமே நேசித்தேன்.

பரிசுத்த என்றால் என்னவென்று அறிய விரும்புகிறீர்களா? அது முற்றிலும் தூய்மையான அன்புதான். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்றால் என்ன என்றறிய விரும்புகிறீர்களா? அது வெறும் உணர்வல்ல. அன்றிரவே கடந்து போகும் மகிழ்ச்சி உணர்வும் அல்ல. மாறாக அது, எல்லா எண்ணங்களையும் ஆண்டவராகிய இயேசுவுக்குள் சிறைபிடிக்கும் அன்பின் ஞானஸ்நானமாக இருக்கிறது (2 கொரிந்தியர் 10:5); அது சகல பயத்தையும் புறம்பே தள்ளும் (1 யோவான் 4:18); நெருப்பு கயிறை எரிப்பது போல எல்லா சந்தேகங்களையும், அவிசுவாசத்தையும் எரித்துவிடும்; நம்மை "சாந்தமும் மனத்தாழ்மையுமாய்" மாற்றும் (மத்தேயு 11:29); முழுப் பகையாய் அசுத்தத்தையும், பொய்யையும், வஞ்சகத்தையும், முகஸ்துதி செய்யும் நாவையும், பொல்லாத எல்லா வழிகளையும் வெறுக்கச் செய்யும்; பரலோகத்தையும், நரகத்தையும் நித்திய யதார்த்தங்களாக்கும்; அடங்காதவர்களிடமும், பாவிகளிடமும் மென்மையாகவும், பொறுமையாகவும் நடந்து கொள்ளச் செய்யும்; நம்மை "சுத்தமும், சமாதானமும், சாந்தமும், இணக்கமும், இரக்கமும், நற்கனிகளும் உள்ளவர்களாகவும், பட்சபாதமும், மாயமும் இல்லாதவர்களாகவும் மாற்றுகிறது (யாக்கோபு 3:17); ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளில் பூரணமான பரிதாபம் கொள்ளவும், தொலைந்து போனதும்,

முரட்டாட்டமுள்ளதுமான உலகத்தை தேவனிடம் கொண்டு வர கடுமையாக உழைக்கவும் வைக்கிறது.

தேவன் இவையனைத்தையும் எனக்காகச் செய்தார், அவருடைய பரிசுத்த நாமம் துதிக்கப்படுவதாக!

(சாமுவேல் ப்ரெங்கிள், *Helps to Holiness* [பரிசுத்தத்திற்கு உதவி], லண்டன்: சால்வேஷனிஸ்ட் பப்ளிஷிங் அன்ட் சப்ளைஸ், லிமிட்டட், 1955.)

14. சற்று சிந்தியுங்கள்! உங்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவரால் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள்?______________

நீங்கள் ஆவியால் நிறைந்து, முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்க முடியும். அப்படி மாறியிருக்கிறீர்களா? நொடிக்கு நொடி ஆவியில் வாழவும், நடக்கவும் உங்களால் கூடும். அப்படி நடக்கிறீர்களா? ஆவியானவர் உங்கள் மூலம் கிருபையுள்ள காரியங்களைச் செய்வார். செய்கிறாரா? ஓ ஆண்டவரே, இனிவரும் நாட்களில், என் வாழ்வில் உம்முடைய முழு ஆளுகையின் சாகசத்தை அனுபவித்து மகிழ விரும்புகிறேன்.

## மனன வசனம்

அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 4:6).